**சுருக்கம்**

வேளாண்மை – வேளாண்மை விரிவாக்க மையம் – தருமபுரி மாவட்டம், பென்னாகரம்–பாப்பாரப்பட்டி – விதை சுத்திகரிப்பு நிலையத்தில் கண்டறியப்பட்ட குறைபாடு தொகை ரூ.55,621/–யை தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை(வேஉ 3)த்துறை**

அரசாணை (டி) எண்.68 நாள்: 18.04.2016

படிக்க:

வேளாண்மை ஆணையரின் கடித எண்.விதைகள்1/91069/2009, நாள்.14.07.2011, 17.02.2015 (ம) 20.01.2016.

******

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், வேளாண்மை ஆணையர் அவர்கள் தருமபுரி மாவட்டம், பென்னாகரம்–பாப்பாரப்பட்டி விதைசுத்திகரிப்பு நிலையத்தில் கண்டறியப்பட்ட பொருள் குறைபாடு தொகை ரூ.55,621/–க்கு பொறுப்பாகும் முன்னாள் பண்ணை மேலாளர்களான திரு.து.சபேசன் மற்றும் திரு.எம்.முருகேசன் ஆகிய இருவரும் பணியிலிருக்கும்பொழுதே இறந்துவிட்டபடியால் அத்தொகையை தள்ளுபடி செய்யுமாறு வேளாண்மை ஆணையர் அரசைக் கோரியிருந்தார். வேளாண்மை ஆணையர் தனது கருத்துருவில் தருமபுரி மாவட்டம், பென்னாகரம்–பாப்பாரப்பட்டி விதை சுத்திகரிப்பு நிலையத்தில் கடந்த 21.10.1993 மற்றும் 22.10.1993 அன்று அவ்வலுவலகப் பொருளாய்வு கண்காணிப்பாளர், திடீர் பொருளாய்வு மேற்கொண்டதில் பொருள் குறைபாடு கண்டறியப்பட்டது, என்றும், 1992–1993–ஆம் ஆண்டில் நடந்த தணிக்கையின்போது எழுப்பப்பட்ட தணிக்கைப் பத்தியில் இருப்புக் குறைபாடு தொகை ரூ.4,600/–க்கு முன்னாள் பண்ணை மேலாளர் திரு.எம்.முருகேசன் அவர்கள் பொறுப்பாவார் என்றும், ரூ.51,021/–க்கு முன்னாள் பண்ணை மேலாளர் திரு.து.சபேசன் அவர்கள் பொறுப்பாவார் என்றும் தெரிவித்துள்ளார். மேற்காணும் பொருள் குறைபாடு தொகை ரூ.55,621/–க்கு பொறுப்பாகும் (1) திரு.து. சபேசன், முன்னாள் பண்ணை மேலாளர் (பநி) பாப்பாரப்பட்டி அவர்கள் 23.11.1993 அன்று இறந்ததாகவும், (2) திரு. எம். முருகேசன், முன்னாள் பண்ணை மேலாளர் (பநி) பாப்பாரப்பட்டி அவர்கள் 15.11.1995 அன்று இறந்ததாகவும், இவர்கள் இருவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தமைக்கான ஆவணங்கள் ஏதும் தற்போது இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட நபர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளாத பொறுப்பு அலுவலர் மீது யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், அதற்கான காரணத்தினை 20 ஆண்டுகளுக்கும் மேலாகக் காலம் கடந்துவிட்ட நிலையில், தற்பொழுது அறிய இயலவில்லை என்றும், மேலும்

திரு.எம்.முருகேசன், வேளாண்மை அலுவலர் திரு.து.சபேசன், வேளாண்மை அலுவலர் ஆகியோர் மீதான குறைபாட்டிற்கான தொகையை தள்ளுபடி செய்ய கோரும் பிரேரணையில் சம்பந்தப்பட்ட பொறுப்பான அலுவலர்கள் இறந்து விட்டதால் பணப்பிடித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், இதனை சிறப்பு இனமாகக் கருதி சம்பந்தப்பட்டவர்கள் இறந்துவிட்டபடியால் பொருள் குறைபாடு தொகை ரூ.55,621/-ஐ தள்ளுபடி செய்து உரிய ஆணை வழங்குமாறு வேளாண்மை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டார்.

2. வேளாண்மை ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று, தருமபுரி மாவட்டம், பென்னாகரம்- பாப்பாரப்பட்டி விதைசுத்திகரிப்பு நிலையத்தில் கண்டறியப்பட்ட பொருள் குறைபாடு தொகை ரூ.55,621/-க்கு பொறுப்பாகும் முன்னாள் பண்ணை மேலாளர்களான திரு.து.சபேசன் மற்றும் திரு.எம்.முருகேசன் ஆகிய இருவரும் பணியிலிருக்கும்பொழுதே இறந்துவிட்டபடியால், தருமபுரி மாவட்டம் பென்னாகரம்- பாப்பாரப்பட்டி விதைசுத்திகரிப்பு நிலையத்தில் கண்டறியப்பட்ட பொருள் குறைபாடு ரூ.55,621/-ஐ (ரூபாய் ஐம்பத்து ஐந்தாயிரத்து ஆறுநூற்று இருபத்து ஒன்று மட்டும்) தள்ளுபடி செய்து ஆணையிடுகிறது.

3. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அ.சா.கு எண்.23040, நாள்.06.04.2016-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி //

ச.விஜயகுமார்
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்.

பெறுநர்
வேளாண்மை ஆணையர்,சென்னை-5
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18(பெயரில்)
முதன்மை மாநில கணக்காயர், /G&SSA/E&RSA/சென்னை -18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8.
மாவட்ட கருவூல அலுவலர், தருமபுரி.

<u>நகல்:</u>
மாண்புமிகு வீட்டுவசதி (மற்றும்) நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை
அமைச்சர் அவர்களின் கூடுதல் நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதி ( வேளாண்மை) த்துறை, சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி துறை மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சென்னை-9.
இருப்பு/உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்